DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**STC.No.111/2025**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | குணசேகரன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | ராமசாமி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2025
எதிரி ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், புலியூரில் குடியிருந்து மணவாசி டோல்பிளாசா ரோந்து பணி அதிகாரிக்கு உதவியாக உள்ளேன். அ.சா.1 திருமூர்த்தி எனது அதிகாரி ஆவார். 12.11.2018 ல் மாலை 05.30 மணிக்கு டோல்பிளாசாவிலிருந்து மேற்கு நோக்கி ரோந்து பணிக்கு சென்று கொண்டிருந்தபோது CH 201–600 கட்டளை பிரிவு பாலத்தில் விசிக கட்சி விளம்பரம் எழுதிக்கொண்டிருந்தார்கள். எழுதிக்கொண்டிருந்த நபரை கேட்ட ராஜா (எ) மன்னன் எழுதச்சொன்னதாக சொன்னார். ராஜா (எ) மன்னன் என்பவரும் அங்கு வந்தார். அ.சா.1 உயரதிகாரியிடம் பேசி புகார்கொடுத்தார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேட்ட நபர் யார் என்று தெரியாது என்றாலும் அவரைப்பற்றி புகாரில் சொல்லவில்லை என்றாலும் சரிதான். அரசியல் நோக்கத்திற்காக போட்ட பொய் வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.26 15:59:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.